# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : 10

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - I**

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - I

நேரம்: 1 மணித்தியாலம்

* சகல வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
* இலக்கம் 1 முதல் 40 வரையிலான வினாக்களுக்கு 1, 2, 3, 4 என வழங்கப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் இலக்கத்தினை தெரிவு செய்து அதற்குரிய கூட்டில் (X) அடையாளமிடுக.

• பல்கலைக்கழக அனுமதியினை எதிர்ப்பார்த்துள்ள பவானி அப்பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலப்பாடத்தில் மேலதிக வகுப்புக்களை நடாத்தி வருகின்றாள்.

1. மேலே தரப்பட்டுள்ள சம்பவத்தில் மனித தேவை, விருப்பத்தை ஒழுங்கு முறையாகக் காட்டும் விடை எது?
   1) கல்வி, மேலதிக வகுப்புக்கள்
   2) மேலதிக வகுப்புக்கள், கல்வி
   3) பல்கலைக்கழகம், கல்வி
   4) வீடு, கல்வி

2. தேவை மற்றும் விருப்பத்திற்கிடையிலான வேறுபாட்டினைக் காட்டுவது
   1) தேவை வரையறுக்கப்படாதது, விருப்பம் வரையறுக்கப்பட்டது.
   2) விருப்பம் பொதுவானது, தேவை பல்வகைப் பட்டவை
   3) தேவைகள் பொதுவானவை, விருப்பங்கள் பரவலானவை
   4) விருப்பங்கள் பல்வகைப்பட்டவை, தேவைகள் பரவலானவை

3. மனித தேவைகளின் பண்புகளை மாத்திரம் உள்ளடக்கிய விடை எது?
   1) எளிமையானை, பல்வகைப்பட்டவை
   2) எளிமையானவை, பொதுவானவை
   3) பொதுவானவை, பரவலானவை
   4) வரையறுக்கப்பட்டவை, பல்வகைப்பட்டவை

4. நிலம் எனும் உற்பத்தி காரணியில் (1).................................. உள்ளடக்கப்படுவதுடன், மூலதனம் எனும் உற்பத்தி காரணியில் (2)...................................... உள்ளடக்கப்படும்.
   மேலே தரப்பட்ட கூற்றில் (1) மற்றும் (2) வெற்றிடங்களுக்கு பொருத்தமான சொற்களை உள்ளடக்கிய விடையினை முறையாகக் காட்டும் விடை எது?
   1) கனிய வளம், காட்டுவளம்
   2) மண், கட்டடம்
   3) கட்டடம், கனியவளம்
   4) காட்டுவளம், மண்

---

♦ பின்வரும் தகவல்களின் உதவியுடன் 5ம், 6ம், 7ம் வினாக்களுக்கு விடையளிக்க.
சியாம் அஹமட் என்பவர் "சியாம் பேக் சென்டர்" எனும் பெயரில் பிரதேசத்தில் கூடுதலாக காணப்படுகின்ற பல்வேறு நாணல் புற்களைப் பயன்படுத்தி அவற்றுடன் தொடர்புடைய பல்வேறு பைகளை உற்பத்தி செய்து வருகின்றார்.

5. "சியாம் பேக் சென்டர்" மீது அக்கறை காட்டும் பிரிவினர் அல்லாதவர்
   1) பிரதேசத்திலுள்ள காரியாலயத்தில் வேலை செய்யும் பெண்கள்
   2) வணிகத்தில் வேலை செய்யும் ஊழியர்கள்
   3) மூலப்பொருட்களை வழங்குபவர்கள்
   4) பிரதேசத்திலுள்ள பாதணி உற்பத்தியாளர்கள்

6. "சியாம் பேக் சென்டர்" இன் உரிமையாளரான சியாமின் பிரதான நோக்கம்
   1) வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தல்
   2) நியாயமான சம்பளத்தை வழங்கல்
   3) வணிகத்தின் எதிர்கால வளர்ச்சி
   4) தொழில் திருப்தி

7. மேலே தரப்பட்ட சியாம் வணிகம் தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் மிகச் சரியான கூற்று எது?
   1) இவ்வணிகமானது சேவை வழங்கும் வணிகமொன்றாகும்
   2) இவ்வணிகமானது பொருள் உற்பத்தி வணிகமொன்றாகும்
   3) இவ்வணிகமானது நலன் புரிச்சேவைகளை வழங்கும் வணிகமொன்றாகும்
   4) இவ்வணிகமானது பொதுத் துறை சார்ந்த வணிகமொன்றாகும்

8. சேவை உற்பத்தி வணிகங்களை மாத்திரம் கொண்ட விடை எது?
   1) சொக்லட் உற்பத்தி நிறுவனம், பற்பசை உற்பத்தி நிறுவனம்
   2) மொத்த வியாபார நிறுவனம், சவர்க்கார உற்பத்தி நிறுவனம்
   3) வங்கி, காப்புறுதி நிறுவனம்
   4) கல்வி நிறுவனம், சொக்லட் உற்பத்தி நிறுவனம்

9. பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   1) உடல் உழைப்பைப் பயன்படுத்தி வேலை செய்வோர் மாத்திரமே உழைப்பு எனும் உற்பத்திக் காரணியில் உள்ளடக்கப்படுவர்
   2) உற்பத்திக்குத் தேவையான நிலம், உழைப்பு, மூலதனம் போன்ற உற்பத்திக் காரணிகளை ஒழுங்கமைத்து உற்பத்திச் செயன்முறையினை மேற்கொள்பவர் முகாமையாளராவார்.
   3) உற்பத்தியின் போது துணையாகக் கொள்ளப்படுகின்ற மனிதரினால் உருவாக்கப்படுபவைகள் முயற்சியாண்மை எனப்படும்.
   4) இயற்கையிலிருந்து கிடைக்கப் பெற்ற அனைத்து வளங்களும் நிலம் எனப்படும்.

10. வணிகரினால் கட்டுப்படுத்த முடியாத சூழல் அழைக்கப்படுவது
   1) அகச் சூழல் எனவாகும் 2) வணிகச் சூழல் எனவாகும்
   3) பேரினச் சூழல் எனவாகும் 4) புறச் சூழல் எனவாகும்

11. வணிகச் சூழல் காரணிகளுள் சில கீழே தரப்பட்டுள்ளன.
   A. வாடிக்கையாளர்
   B. வழங்குநர்
   C. முகாமையாளர்
   D. ஊழியர்
   E. அரசியல் சூழல்

   மேலே தரப்பட்டவைகளில் புறச் சூழலுக்குரிய காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய விடை எது?
   1) A, B, E 2) A,B,D 3) A,C,D 4) B,D,E

12. சேனைபுரம் பிரதேசத்தில் வாழும் ருக்சான் அவரின் சகோதரிகள் இருவருடன் இணைந்து உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சிற்றளவு வணிகமொன்றை ஆரம்பித்தார். அரசு அவர்களின் வணிகத்தை ஊக்குவிப்பதற்காக தரமான மூலப்பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்துள்ளது.
   மேலே தரப்பட்ட சம்பவத்தில் அரசு வழங்குகின்ற ஊக்குவிப்பு உள்ளடக்கப்படும் சூழல் எது?
   1) பூகோளச் சூழல் 2) தொழில் நுட்பச் சூழல்
   3) பொருளதாரச் சூழல் 4) அரசியல் சூழல்

13. பின்வருவனவற்றுள் பூகோளச் சூழலினூடாக கிடைக்கப்பெறுகின்ற அனுகூலமொன்று
   1) வெளிநாட்டு மூலதனங்கள் நாட்டினுள் உட்பாய்ச்சப்படல்
   2) பாரிய போட்டி உருவாதல்
   3) பயிற்சி பெற்ற ஊழியர்கள் வெளிநாடு செல்லல்
   4) தரமான உள்நாட்டு மூலப் பொருட்களைப் பெற முடிதல்

14. பொருளாதாரச் சூழல் காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய விடை எது?
   1) வருமானப்பரம்பல், வரவு செலவுத் திட்டக் கொள்கை
   2) வரவு செலவுத்திட்டக்கொள்கை, உட்கட்டமைப்பு வசதிகள்
   3) சூழல் பாதுகாப்பு, சட்டதிட்டங்கள், வரவு செலவுத்திட்டக் கொள்கை
   4) சர்வதேச தொடர்புகள், சேமிப்பு

15. உரிமையின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட வணிக அமைப்புக்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. தனியுரிமை வணிகம்
B. அரச திணைக்களம்
C. கூட்டுறவுச் சங்கம்
D. அரச கம்பனிகள்
E. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

இவற்றுள் தனியார்துறைசார்ந்த வணிகங்களை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி எது?

1) ABD 2) BCE 3) ACE 4) CDE

16. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் அனுகூலங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடையினைத் தெரிவு செய்க.

1) நீண்டகால வாழ்தன்மை காணப்படல், வரையறுக்கப்படாத பொறுப்பு, சட்ட ஆளுமை காணப்படல்
2) நீண்டகால வாழ் தன்மை காணப்படல், வரையறுக்கப்பட்ட பொறுப்பு சட்ட ஆளுமை காணப்படல்
3) நீண்டகால வாழ்தன்மை காணப்படாமை, வரையறுக்கப்படாத பொறுப்பு சட்ட ஆளுமை காணப்படல்
4) நீண்டகல வாழ்தன்மை காணப்படாமை, வரையறுக்கப்பட்ட பொறுப்பு, சட்ட ஆளுமையற்றிருத்தல்

17. அமைச்சரொருவரின் கீழ் செயற்படுகின்றதும் பூரணமாக அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட நிறுவனம்

1) அரச கூட்டுத்தாபனங்கள் எனப்படும்
2) கூட்டுறவுச் சங்கம் எனப்படும்
3) அரச கம்பனிகள் எனப்படும்
4) அரச திணைக்களம் எனப்படும்

♦ பின்வரும் கூற்றின் உதவியுடன் 18ம் 19ம் வினாக்களுக்கு விடையளிக்க.

இன்பம் என்பவர் ‘இன்சுவை பானங்கள்” எனும் பெயரிலான குளிர்பான விற்பனை நிலையமொன்றை தனது தனிப்பட்ட செல்வத்தைப் பயன்படுத்தி ஆரம்பிப்பதற்கு எண்ணுகின்றார். எனினும், அவருக்கு வணிகம் தொடர்பிலான அறிவு மற்றும் அனுபவம் மிகக் குறைவு என்பதனால் பாடாசலை நண்பனான வர்ணனை தனது வணிகத்தில் இணைத்துக்கொள்வதற்கு இன்பம் எண்ணுகின்றார்.

18. இன்பம் தெரிவு செய்யவேண்டிய மிகப் பொருத்தமான வணிக அமைப்பு வகை எது?

1) தனியுரிமை வணிகம் 2) பங்குடமை வணிகம்
3) கூட்டுறவுச் சங்கம் 4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

19. மேற்குறிப்பிட்ட வணிகத்தை பதிவு செய்தல் தொடர்பில் மிகச் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

1) வணிகத்தை கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் கட்டாயமாகும்.
2) வணிகத்தின் பெயரைப் பதிவு செய்தல் கட்டாயமானது
3) வணிகத்தை கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்தல்வேண்டும்
4) வணிகத்தை அல்லது வணிகத்தின் பெயரைப் பதிவு செய்தல் கட்டாயமானது

20. தனியுரிமை வணிகமொன்றைப் பதிவு செய்வதற்குத் தேவையான விண்ணப்பப் பத்திரத்தைப் பெறவேண்டிய இடம்

1) கிராம சேவைகள் அலுவலகமாகும். 2) மாகாண சபைக் காரியாலயத்திலாகும்
3) பிரதேச செயலாளர் காரியலயத்திலாகும் 4) கம்பனிப்பதிவாளர் காரியலயத்திலாகும்

21. பருமனின் அடிப்படையில் வணிகஅமைப்புக்களை வகைப்படுத்தும் போது கவனத்திற்கொள்ளத் தேவையற்ற நியதியாவது

1) வணிகத்தின் மூலதனத்தின் அளவு 2) ஊழியர் எண்ணிக்கை
3) பயன்படுத்துகின்ற வலுச் சக்தியின் அளவு 4) வணிகத்தின் இலாப நோக்கம்

22. கணக்கீட்டின் பிரதான நோக்கமாக அமைவது,

1) நிதியாண்டின் முடிவில் நிதிக்கூற்றினைத் தயாரித்தல்
2) வணிகத்தில் அக்கறையுள்ள பிரிவனர்களுக்கு தேவையான பல்வேறு தகவல்களை வழங்கல்
3) இயக்குநருக்கு அல்லது முகாமையாளருக்குத் தேவையான தகவல்களை வழங்கல்
4) முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கல்.

23. கடந்தகாலக் கொடுக்கல்வாங்கலொன்றின் விளைவாக உருவானதும் எதிர்காலத்தில் வணிகத்திற்கு பொருளாதார நலன்களை உட்பாய்ச்சக்கூடியதுமான வளங்கள் ............................ எனப்படும்.
1) பொறுப்புக்கள் 2) சொத்துக்கள் 3) செலவுகள் 40 வருமானங்கள்

24. கீழே X நிரலில் கணக்கு வகைகளும் Y நிரலில் அக்கணக்குகளில் பதிவு செய்யப்படுகின்ற உருப்படிகளும் காட்டப்பட்டுள்ளது.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. சொத்துக் கணக்கு | A. விற்பனை |
| 2. பொறுப்புக் கணக்கு | B. கொடுத்த தரகு |
| 3. உரிமைக் கணக்கு | C. வங்கிக் கடன் |
| 4. வருமானக்கணக்கு | D. கடன் பட்டோர் |
| 5. செலவுக் கணக்கு | E. மூலதனம் |

X நிரலை Y நிரலுடன் ஒழுங்கு முறையாகப் பொருத்தும் போது கிடைக்கும் விடை எது?
1) A,C,D,B,E 2) C,A,B,E,D 3) D,C,E,A,B 4) D,B,C,A,E

25. வணிகமொன்றின் சொத்திலும் பொறுப்பிலும் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய கொடுக்கல் வாங்கலாக அமைவது
1) உரிமையாளர் மேலதிக மூலதனமாக இட்ட காசு ரூபா 100 000
2) உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காகப் பற்றிய காசு ரூபா. 5000
3) வணிகம் மின்சாரக் கட்டணமாக செலுத்திய தொகை ரூபா 2000
4) கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசு ரூபா 5000

♦ பின்வரும் தகவல்களின் உதவியுடன் 26ம், 27ம் 28ம் வினாக்களுக்கு விடையளிக்க.
ஜீவன் வணிகத்தில் 2018 மே மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களில் சில பின்வருமாறு
A. ரூபா 500 000 கிரயம் கொண்ட பொருட்கள் கொள்வனவு
B. மாதாந்த நிறுவன வாடகை செலுத்தியது ரூபா 5000
C. பெற்ற வங்கிக்கடன் ரூபா 100 000
D. ரூபா 10 000 பெறுமதியான பொருட்கள் ரூபா 15 000 விற்கு கடனுக்கு விற்பனை
E. ஊழியர் சம்பளமாக செலுத்திய தொகை ரூபா 5 000

26. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுள் வணிகத்தின் பொறுப்பில் அதிகரிப்பை ஏற்படுத்தும் கொடுக்கல்வாங்கலாவது,
1) A யாகும் 2) B யாகும் 3) C யாகும் 4) D யாகும்

27. மேற்குறிப்பிடட கொடுக்கல் வாங்கல்களுள் வணிகத்தின் செலவுகளாவன,
1) A யும் B யுமாகும் 2) B யும் D யுமாகும்
3) C யும் E யுமாகும் 4) B யும் E யுமாகும்

28. மேற்குறிப்பிட்ட D கொடுக்கல் வாங்கலானது வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை சரியாகக் காட்டும் விடை எது?

| | காசு + | சரக்கிருப்பு | + கடன் பட்டோர் | = | பொறுப்பு | + உரிமை |
|---|---|---|---|---|---|---|
| 1) | (10 000) | - | + 5 000 | = | - | (5 000) |
| 2) | - | (10 000) | + 15 000 | = | - | + 5000 |
| 3) | - | 10 000 | + 15 000 | = | - | + 5000 |
| 4) | +15000 | - | (10 000) | = | - | + 5000 |

29. சொத்துக்கள் = உரிமை + பொறுப்பு
-18 000 = - 18 000

மேலே கணக்கீட்டுச் சமன்பாட்டில் தரப்பட்டுள்ள கொடுக்கல்வாங்லாவது
1) செலுத்திய சம்பளம் ரூ. 18 0000
2) செலுத்திய வங்கிக் கடன் ரூ. 18 000
3) தளபாட உபகரணம் கொள்வனவு ரூ. 18 000
4) கடன் கொடுநருக்குச் செலுத்தியது ரூ. 18 000

30. சரியான இரட்டைப் பதிவுத் தத்துவமாக அமைவது
1) செலவு குறைதல் வரவு
செலவு அதிகரித்தல் செலவு
2) பொறுப்பு குறைதல் வரவு
பொறுப்பு அதிகரித்தல் செலவு
3) உரிமை அதிகரிப்பு வரவு
உரிமை குறைதல் செலவு
4) வருமானம் அதிகரித்தல் வரவு
வருமானம் குறைவடைதல் செலவு

31. தனுஸ், வணிகத்தின் தரகுவருமானம் ரூபா 5 000 ஆகும். பெற்ற தரகுக் கணக்கு
1) பொறுப்புக் கணக்கொன்றாகும்
2) சொத்துக் கணக்கொன்றாகும்
3) செலவுக் கணக்கொன்றாகும்
4) வருமானக் கணக்கொன்றாகும்

32. சொத்துக் கண்குகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.
1) கட்டடக் கணக்கு, தரகு வருமானக் கணக்கு, வங்கிக் கடன் கணக்கு
2) சரக்கிருப்புக் கணக்கு, தளபாட உபகரணக் கணக்கு, கடன் பட்டோர் கணக்கு
3) சம்பளக் கணக்கு, கடன்கொடுநர் கணக்கு, காணிக் கணக்கு
4) வங்கிக் கடன் கணக்கு, கடன்பட்டோர் கணக்கு, தளபாடக் கணக்கு

33. குசும் வணிகத்திற்கு காசாக கிடைக்கப்பெற்ற நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 2500 ஆகும் இதற்குரிய சரியான இரட்டைப்பதிவு
1) நிலையான வைப்பு வட்டி வருமானக் கணக்கு வரவு
காசுக் கணக்கு செலவு
2) நிலையான வைப்புக் கணக்கு வரவு
நிலையான வைப்பு வட்டி வருமானக் கணக்கு செலவு
3) நிலையான வைப்பு வட்டி வருமானக் கணக்கு வரவு
வங்கிக் கடன் கணக்கு செலவு
4) காசுக் கணக்கு வரவு
நிலையான வைப்பு வட்டிவருமானக் கணக்கு செலவு

34. வணிகமொன்றில் காணப்படுகின்ற சகல கணக்குகளையும் உள்ளடக்கியது?
1) பரீட்சை மீதி எனப்படும்
2) பேரேடு எனப்படும்
3) காசுக் கணக்கு எனப்படும்
4) பேரேட்டுக்கணக்கு எனப்படும்

35. விற்பனை நாட்குறிப்பேட்டில் கொடுக்கல் வாங்களைப் பதிவு செய்வதற்குரிய மூல ஆவணமாக அமைவது
1) பற்றுச்சீட்டாகும்
2) கைச்சாத்தாகும்
3) நாட்குறிப்புக் கைச்சாத்தாகும்
4) பட்டியலாகும்

36. முதன்மை ஏடாகவும் பேரேட்டுக் கணக்காகவும் இரட்டைக் கருமங்ளை நிறைவேற்றும் ஏடு எது?
1) விற்பனை நாட்குறிப்பேடாகும்
2) காசேடாகும்
3) கொள்வனவு நாட்குறிப்பேடாகும்
4) பொதுக்குறிப்பேடாகும்

37. பின்வரும் கொடுக்கல்வாங்கல்களுள் காசேட்டில் பதிவு செய்யப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கிய விடை எது?
   1) பெற்ற தரகு வருமானம், காசுக் கொள்வனவு, தளபாடம் கொள்வனவு
   2) கடன்கொடுநருக்குச் செலுத்தியது, பெற்ற தரகு வருமானம், கடனுக்குச் சரக்குகள் கொள்வனவு
   3) கட்டடவாடகை செலுத்தியது, காசு விற்பனை, செலுத்த வேண்டிய மின்சாரம்
   4) தளபாடம் கடன் கொள்வனவு, கடன்பட்டோரிடமிருந்து கிடைத்தது, பெற்ற தரகு வருமானம்

38. வணிகமொன்றின் வங்கிக் கணக்கில் செலவு மீதியொன்று காணப்படுமாயின் அதன் விளக்கம்
   1) வங்கி மேலதிகப்பற்று காணப்படுகின்றது என்பதாகும்
   2) வங்கிக்கடன் மீளச் செலுத்தப்பட்டுள்ளது என்பதாகும்
   3) நேரடி வைப்பொன்று கிடைக்கப்பெற்றுள்ளது என்பதாகும்.
   4) நிலையியற் கட்டளையின் கீழ் செலவொன்று செலுத்தப்பட்டுள்ளது என்பதாகும்

39. கவிதா வணிகத்திற்கு விற்பனைமூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 70 000 காசோலை உடனடியாகவே வங்கியில் வைப்பிலிடப்படுமாயின் இதற்கான இரட்டைப் பதிவு,
   1) விற்பனை கணக்கு வரவு
      வங்கிக் கணக்கு செலவு
   2) வங்கிக் கணக்கு வரவு
      விற்பனைக் கணக்கு செலவு
   3) காசுக் கணக்கு வரவு
      விற்பனைக் கணக்கு செலவு
   4) விற்பனைக் கணக்கு வரவு
      காசுக் கணக்கு செலவு

40. அமல் எனும் கடன் பட்டோரிடமிருந்து கிடைக்கப்பெற்று வங்கியில் வைப்பிலிடப்பட்ட காசோலையொன்று மறுக்கப்பட்டதாக வங்கி அறிவித்துள்ளது. இதற்குரிய இரட்டைப் பதிவு
   1) கடன்பட்டோன் கணக்கு வரவு
      காசுக் கணக்கு செலவு
   2) வங்கிக் கடன் கணக்கு வரவு
      கடன்பட்டோன் கணக்கு செலவு
   3) கடன்பட்டோன் கணக்கு வரவு
      வங்கிக் கணக்கு செலவு
   4) காசுக் கணக்கு வரவு
      கடன்பட்டோன் கணக்கு செலவு

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : 10

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்** - ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - **II** நேரம்:2 மணித்தியாலம்

**கவனிக்கவும் :-**

முதலாம் வினாவுக்கும் பகுதி - I ல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி - II ல் இருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

*1.* பின்வரும் நிகழ்வினை வாசித்தபின்னர் (i) முதல் (x) வரையான வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்க

*க.பொ.த. (உயர் தரம்) கற்றுத் தேறிய அருண் சிறிநாத் அதன் பின்னர் வெளிநாடு சென்றார். இரண்டு வருடங்களின் பின்னர் ரூபா 1000 000 பணத்துடன் நாடு திரும்பிய அருண் அப்பணத்தொகையையும் அவனிடமிருந்த ரூபா 3500 000 பெறுமதியான வாகனத்தையும் பயன்படுத்தி போக்குவரத்துச் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கு எண்ணினார். அதற்கேற்ப 'அருண் போக்குவரத்து சேவை'' எனும் பெயரில் 2018.01.01 இல் வணிகம் ஆரம்பிக்கப்பட்டு அது பதிவும் செய்யப்பட்டது. தனது வீட்டிலேயே நிறுவன அலுவலகத்தை அருண் நடாத்திச் சென்றதுடன், தனது நண்பனான சிறிதரனை மாதாந்தம் ரூபா 30 000 சம்பளத்தில் முகாமையாளராக நியமித்துக்கொண்டார். இவர் வாகனம் தொடர்பில் சிறந்த அறிவினைக் கொண்டிருந்தார்.*

*2018.01.01 தொடக்கம் 2018.01.08 வரையான முதல்வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு*

*1)* வங்கியில் *ரூபா 800 000 வைப்பிலிடப்பட்டு நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டது.*
*2)* எழுதுகருவிகளின் கொள்வனவு *ரூபா 25 000*
*3)* வங்கியிலிருந்து எடுத்த கடன் *ரூபா 200 000*
*4)* வாகனம் பழுது பார்த்தல் செலவு *ரூபா 125 000*
*5)* தனியுரிமை நிறுவனங்களுக்கு போக்குவரத்திற்காக வாகனங்களை வழங்கி பெற்றவருமானம் ரூபா *300 0000*
*6)* எரிபொருளுக்காக *ரூபா 150 000 செலவழிக்கப்பட்டுள்ளதுடன் அருண் தனது தனிப்பட்டவாகனத்திற்கு ரூபா 15 000 விற்கு எரிபொருளை பற்றியுள்ளார்.*

i) *அ)* மேலே தரப்பட்ட நிகழ்வில் குறிப்பிடப்படுகின்ற வணிகம் அமைப்பு எது?
*ஆ)* அவ்வணிக அமைப்பில் காணப்படுகின்ற அனுகூலமொன்றைக் குறிப்பிடுக.
ii) இவ்வணிகத்தில் காணக்கூடிய இரு பலம்களைத் தருக.
iii) மேலே தரப்பட்ட சம்பவத்திலிருந்து உழைப்பு, முயற்சி போன்ற உற்பத்திக்காரணிகளுக்கு தலா இரு உதாரணங்கள் வீதம் தருக.
iv) மேலே குறிப்பிடப்பட்ட வணிகம் பதிவு செய்யப்பட்டமையினால் கிடைக்கக் கூடிய இரு நன்மைகளைத் தருக.
v) "அருண் போக்குவரத்துச் சேவை" வணிகத்தின் *2018.01.01* இல் ஆரம்ப உரிமையாண்மையினைக் கணிக்க.
vi) மேலே தரப்பட்ட வணிகத்தின் *2018.01.08*இல் காசுமீதியைக் கணிக்க.
vii) காசேட்டினைத் தயாரிக்கும்போது பயன்படுத்தப்படுகின்ற மூல ஆவணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
viii) மேலே தரப்பட்ட வணிகத்தில் காணப்படுகின்ற
*அ)* நடைமுறையல்லாச் சொத்தொன்றைக் குறிப்பிடுக.
*ஆ)* நடைமுறையல்லாச் சொத்துக்களில் காணப்படுகின்ற பண்பொன்றையும் தருக.
ix) *அ)* இவ்வணிகத்தில் சொத்தும் பொறுப்பும் அதிகரிக்கக்கூடிய கொடுக்கல் வாங்கலொன்றைத் தருக.
*ஆ)* இவ்வணிகத்தின் பிரதான வருமானமாக அமைவது எது?
x) *அ)* மேற்குறிப்பிட்ட வணிகத்தில் உரிமை மாற்றமடைகின்ற சந்தர்ப்பமொன்றைத் தருக.
*ஆ)* அச்சந்தர்ப்பத்திற்குரிய இரட்டைப் பதிவினைத் தருக. *(20 புள்ளிகள்)*

## பகுதி I - வணிகக் கல்வி

2. பிறந்ததிலிருந்து இறக்கும் வரை மனிதனுக்கு பல்வேறு பொருட்களும் சேவைகளும் தேவைப்படுகின்றன.
   i) அ) பொருள் உற்பத்தி வணிகம் என்றால் என்ன? என்பதை விளக்குக.
      ஆ) பொருள் உற்பத்தி வணிகங்களுக்கு இரு உதாரணங்கள் தருக. *(2 புள்ளி)*
   ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிப்பிடுக.
      அ) பொருட்கள் சேவைகளின் தரத்தினை மேம்படுத்தல் வணிகங்களின் இரு பிரதான நோக்கங்களில் ஒன்றாகும்.
      ஆ) சில்லறை வியாபார நிலையம் பொருள் உற்பத்தி வணிகமல்ல.
      இ) இயந்திரம், கட்டடம் என்பன நிலம் என்ற உற்பத்திக் காரணிக்குரியவைகளாகும்.
      ஈ) வணிகங்களுக்கு பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்கி அரசு வணிகங்களுக்கான தனது பங்களிப்பை வழங்கிவருகின்றது. *(2 புள்ளி)*
   iii) குடும்பலகம பிதேசத்தில் வசிக்கும் சபுமல் ஒரு திறமையான தையற்கலைஞராவார். இவர் தனது பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளைத் தைத்து நியாயமான விலையில் விற்பனை செய்து வருகின்றார்.
      அ) சபுமலினால் நிறைவு செய்யப்படுகின்ற அடிப்படைத் தேவை எது?
      ஆ) சபுமல் ஆடைகளைத் தைப்பதற்காகப் பயன்படுத்துகின்ற தையல் இயந்திரம் எவ்வுற்பத்திக் காரணிக்குரியது?
   iv) பாடசாலைக் கல்வியை நிறைவு செய்துள்ள நஸ்ரின் சுபைர் பாடசாலைக்கு அருகில் "S and N புக்சொப்" எனும் பெயரில் புத்தக விற்பனை நிலையமொன்றை ஆரம்பித்தார்.
      அ) "S and N புக் சொப்" இல் அக்கறைகொண்டுள்ள இரு பிரிவிர்களைத் தருக.
      ஆ) மேலே தரப்பட்ட அக்கறையுள்ள ஒரு பிரிவினரின் இரு நோக்கங்களைத் தருக. *(2 புள்ளி)*

   (மொத்தம் *8 புள்ளி)*

3. வணிமொன்றை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதாயின் வணிகச் சூழல் தொடர்பில் தொடர்ச்சியாகக கவனம் செலுத்துதல் மிக முக்கியமானதாகும்.
   i) அ) வணிகச் சூழலை இரு வகைகளாக வகைப்படுத்தலாம். அவற்றுள் அகச் சூழல் என்றால் என்ன?
      ஆ) வணிகத்தின் அகச் சூழல் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
   ii) பின்வரும் கூற்றுக்கள் "உண்மை அல்லது பொய்" என்பதைக் குறிப்பிடுக.
      அ) வணிகமொன்றின் வழங்குநர்கள் அகச் சூழல் காரணியொன்றாகும்.
      ஆ) தனது அறிவு மற்றும் ஆற்றலின் அடிப்படையில் ஒப்படைக்கப்படுகின்ற கருமங்களை சிறப்பாக மேற்கொள்பவர் முகாமையாளராவார்.
      இ) கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட சாதாரண தபாலுக்குப் பதிலாக இலத்திரனியல் தபாலைப் பயன்படுத்துவது தொழில்நுட்பச் சூழலுக்குரியதாகும்.
      ஈ) ரஷ்யாவில் பயன்படுத்தப்படுகின்ற பணம் ரூபாய் எனும் பெயரில் அழைக்கப்படுகிறது.
   iii) அமைதியான சூழலொன்றில் வசிக்கும் ரம்யா ஓய்வுபெற்ற திறமையானதொரு சங்கீத ஆசிரியையாவார். அவர் 'ரம்யா கலையகம்' எனும் பெயரில் கலையகமொன்றை தனது வீட்டில் நடாத்திச் செல்கின்றார்.
      அ) மேலே தரப்பட்ட நிகழ்வில் குறிப்பிடப்படுகின்ற பலம் ஒன்றையும், பலவீனமொன்றையும் தருக.
      ஆ) வணிகத்தின் அகச்சூழலை அறிந்துகொள்வதன் முக்கியத்துவம் தொடர்பில் இரு விடயங்களைக் குறிப்பிடுக.
   iv) அ) வணிகத்தின் சட்டச் சூழல் என்றால் என்ன?
      ஆ) சட்டச் சூழலுடன் தொடர்புடைய ஒரு கட்டளைச் சட்டத்தைத் தருக.

4. சகீபும், அதீபும் தமது சேமிப்பிலிருந்து தலா ரூபா 300 000, ரூபா 600 000 வை மூலதனமாக இட்டு பிரயாணப் பைகளை உற்பத்தி செய்யும் வணிகமென்றை ஆரம்பித்து நடாத்திச் செல்கின்றனர்.
   i) அ) இவ்வணிகமானது உரிமையின் அடிப்படையில் தனியார் துறையில் எவ்வணிக வகைக்குரியதாகும்.
      ஆ) அவ்வணிக அமைப்பு வகையின் இரு அனுகூலங்களைத் தருக.
   ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிப்பிடுக.
      அ) கூட்டுறவுச் சங்கம் தனியார் துறை சார்ந்த வணிக அமைப்பாகும்.
      ஆ) தனியுரிமை வணிகமொன்றின் பெயரைப் பதிவு செய்வதால் அதற்கு சட்ட ஆளுமை கிடைக்கப் பெறுகின்றது.

இ) இலங்கைப் போக்குவரத்து சபை அரச கூட்டுத்தாபனமொன்றாகும்.
ஈ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்கு பங்குவழங்கலின் மூலம் மூலதனத்தைத் திரட்டிக்கொள்ள முடியும்.

iii) அ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி என்றால் என்ன?
ஆ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் இரு அனுகூலங்களைத் தருக.

iv) சமனெலிய பிரதேசத்தில் வசிக்கின்ற சசிதரன் சுந்தர் மின்சார உபகரணங்களைப் பழுதுபார்க்கும் வணிகமொன்றை நடாத்திச் செல்கின்றார். அவர் தனது வணிகத்தை 'சசி இலக்ரிக்கல்'' எனும் பெயரில் நடாத்திச் செல்கின்றார்.
அ) சசி இலக்ரிகல்ஸ் வணிகத்தை பதிவு செய்ய வேண்டுமா?
ஆ) உங்களது விடைக்கான காரணத்தைத் தருக.

## பகுதி II - கணக்கீடு

5. i) அ) செலவு என்பதற்கான வரைவிலக்கணத்தைத் தருக. (1 புள்ளி)
ஆ) பொறுப்பொன்றின் இருபண்புகளைத் தருக. (1 புள்ளி)

ii) பின்வரும் ஒவ்வொருகொடுக்கல் வாங்கலும் உரிமையில் ஏற்படுத்துகின்ற தாக்கத்தை "அதிகரிக்கும்", "குறையும்'' "மாற்றமடையாது'' என எழுதிக் காட்டுக.
அ) வங்கிக்கடன் பெற்றது ரூபா 40 000
ஆ) உரிமையாளரின் வீட்டு மின்கட்டணமான ரூபா 1500 வணிகத்தினால் செலுத்தப்பட்டது
இ) கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசு ரூபா 5000
ஈ) காசு விற்பனை ரூபா 10 000 (2 புள்ளி)

iii) அ) பின்வரும் கணக்குகள் எக்கணக்கு வகையைச் சார்ந்தது என்பதைக் குறிப்பிடுக.
1) காசுக் கணக்கு 2) சம்பளக் கணக்கு 3) கொள்வனவுக் கணக்கு
4) கடன்பட்டோர் கணக்கு (2 புள்ளி)
ஆ) சமீர் வணிகத்தின் 2017ம் வருடத்திற்கான தகவல்களில் சில கீழே தரப்பட்டுளளன.

| | ரூபா |
|---|---|
| மூலதனம் (2017.01.01ல்) | 250 000 |
| வருடத்திற்குரிய வருமானங்கள் | 135 000 |
| வருடத்திற்குரிய செலவுகள் | 108 000 |
| வருடத்தினுள் உரிமையாளர் இட்ட காசு | 75 000 |

**தேவைப்படுவது**
2017.12.31 உரிமையாளரின் உரிமையின் பெறுமதியினைக் கணிக்க.
(24 புள்ளி)

iv) ரோகிணி வணிகத்தில் 2018 மே 01 இல் பின்வரும் மீதிகள் காணப்பட்டன.

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| தளபாட உபகரணம் | 200 000 | வங்கிக் கடன் | 50 000 |
| சரக்கிருப்பு | 100 000 | கடன் கொடுநர் | 100 000 |
| காசு | 50 000 | மூலதனம் | 200 000 |

மேமாதத்தில் முதலாவது வாரத்தினுள் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றன.
1) கடனுக்கு கொள்வனவு செய்த சரக்குகள் ரூபா 50 000
2) வங்கி வட்டி ரூபா 1000 உட்பட வங்கிக்கடனுக்காகக் செலுத்திய தவணைக் கட்டணம் ரூபா 5000
3) ரூபா 50 000 கிரயம் கொண்ட பொருட்கள் ரூபா 75 000 விற்கு காசுக்கு விற்கப்பட்டது.
4) காப்புறுதிக் கட்டணம் செலுத்தியது ரூபா 5000

*தேவைப்டுவது*
மேலே தரப்பட்ட மீதிகள் உட்பட கொடுக்கல் வாங்கல்கள் பின்வரும் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் காட்டுக. (கீழேயுள்ள மாதிரியினைப் பயன்படுத்தவும்

| கொடுக்கல் வாகங்கல் | தளபாட உபகரணம் | + சரக்கிருப்பு | + காசு | = வங்கிக் கடன் | + கடன் கொடுநர் | + மூலதனம் |
|---|---|---|---|---|---|---|
| ................. | | | | | | |
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |

(4 புள்ளி)

(மொத்தம் 12 புள்ளி)

6. i) அ) கொடுக்கல் வாங்கலொன்றின் இரட்டை விளைவு என்றால் என்ன?
   ஆ) சொத்துக்கள் தொடர்பிலான இரட்டைப் பதிவுத் தத்துவத்தை எழுதிக் காட்டுக. (2 புள்ளி)
   ii) அ) கணக்கு என்றால் என்ன?
   ஆ) பேரேடொன்றில் காணப்படுகின்ற கணக்கு வகைகளைத் தருக. (2 புள்ளி)

   iii) பின்வரும் கொடுக்கல்வாங்கல்களுக்குரிய இரட்டைப் பதிவினைத் தருக.
   அ) உரிமையாளர் தனது சொந்த தேவைக்காக பற்றிய காசு ரூபா 10 000
   ஆ) மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூபா 2 000
   இ) கடனுக்கு விற்பனை செய்த பொருட்கள் ரூபா 60 000
   ஈ) கிடைத்த வட்டி வருமானம் ரூபா 50 000

(4 புள்ளிகள்)

*தினேஸ் வணிகத்தில் 2018 மே மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கிய காசுக் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது.*

| திகதி | விபரம் | | தொகை ரூபா | திகதி | விபரம் | | தொகை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| 2018.05.01 | மூலதனக் கணக்கு | | 100 000 | 2018.05.02 | கொள்வனவு | | 10 000 |
| 05.10 | விற்பனைக் கணக்கு | | 25 000 | 05.06 | வங்கிக் கடன் வட்டி | | 2 000 |
| 05.15 | கடன்பட். கணக்கு | | 12 000 | 05.20 | உபகரணம் | | 8 000 |
| 05.28 | தரகு வருமானம் | | 5 000 | 05.25 | கடன் கொடுநர் | | 5 000 |
| | | | | 05.31 | மீ.கீ.கொ.செ | | 117 000 |
| | | | 142 000 | | | | 142 000 |
| 06.01 | மீ.கீ. கொ.வ. | | 117 000 | | | | |

**வேண்டப்படுவது.**

மேலே தரப்பட்ட காசுக் கணக்கில் பதிவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை தினேஸ் வணிகத்தின் பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்துகாட்டுக. (4 புள்ளி)

7. i) அ) காசுக் கழிவு என்றால் என்ன?
   ஆ) பெற்ற கழிவினை கணக்குகளில் பதிவு செய்வதற்குரிய இரட்டைப் பதிவினை எழுதிக் காட்டுக. (2 புள்ளி)

   ii) பின்வரும் அட்டவணையின் இடைவெளிகளைப் பூரணப்படுத்துக.

| கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | மூல ஆவணம் | மூல ஏடு |
|---|---|---|
| அ) விற்பனைக்கான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு | .................................................. | .................................................. |
| ஆ) .......................................................... | சில்லறைச் செலவுக்கைச்சாத்து | .................................................. |

(2 புள்ளி)

iii) அ) சில்லறைக் காசு வசக்கட்டு என்றால் என்ன?

ஆ) வரையறுக்கப்பட்ட ஹைதர் கம்பனியின் சில்லறைக் காசாளரின் கையில் 2018 மே 01 இல் மீதியாக இருந்த காசு ரூபா 460 ஆகும். மே மாதத்தில் அவர் மேற்கொண்ட செலவுகளின் (கைச்சாத்துக்களின்) பெறுமதி ரூபா 1040 ஆகும்.

1) மே மாதத்திற்கான சில்லறைக் காசு வசக்கட்டின் பெறுமதி எவ்வளவு?

2) 2018.05.31ல் பிரதம காசாளரினால் மீள் நிரப்பப்படும் பெறுமதி எவ்வளவு (2 புள்ளி)

iv) சஞ்சீவன் வணிகத்தின் 2018.05.01ல் காணப்பட்ட மீதிகள் பின்வருமாறு

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| காசு | 65 000 | மூலதனம் | 100 000 |
| கடன்பட்டோர் | | கடன் கொடுநர் | |
| வீமன் | 30 000 | விசாலம் | 20 000 |
| ராமன் | 25 000 | கமலி | 35 000 |

மேமாத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

05.03 காசு விற்பனை ரூபா 25 000

05.05 மின் கட்டணம் செலுத்தியது ரூபா 750

05.10 விசாலத்தின் கடனானது ரூ 1000 கழிவு கழித்து ரூபா 19 000 செலுத்தப்பட்டது.

05.16 காசுக் கொள்வனவு ரூ. 15 000

05.20 ராமன் தனது கடனை 5% கழிவு கழித்து காசாக செலுத்தினார்

05.25 வீமன் தனது கடனில் ரூபா 10 000 மீளச் செலுத்தியபோது ரூபா 500 கழிவு வழங்கப்பட்டது.

05.28 கமலியின் கடனில் ரூபா 20 000 வை மீளச் செலுத்திய போது 5% கழிவு கிடைக்கப்பெற்றது.

05.30 வங்கியில் வைப்பிலிட்ட காசு ரூபா 10 000 ஆகும்

***தேவைப்படுவது***

சங்சீவன் வணிகத்தின் 2018 மே மாதத்திற்கான காசுக் கணக்கு (6 புள்ளி)